### கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103ஆவது பிறந்த நாள் விழா!

## மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



கடலூர் கிழக்கு மாவட்டத்தில் ஜுன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 ஆவது பிறந்த நாள் விழாவை புத்தெழுச்சி நாளாக கொண்டாட வேண்டுமென கழக தலைவர் அவர்களின் வேண்டுகோளின்படி மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர், வட்டம், வார்டு, கிளைக்கழகங்கள் தோறும் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி. மரியாதை செலுத்தி, இருவண்ணக் கழக கொடியேற்றி, மூத்த முன்னோடிகளுக்கு உதவிடும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், விளையாட்டுப் போட்டிகள் நடத்திப் பரிசுகளை வழங்கியும், ஏழை, எளிய மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

அதுசமயம், நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், ஒன்றிய குழுத்தலைவர்கள், மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, வர்ததகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்பு சாரா தொழிலாளர் அணி,, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடி கள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்,
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### த.வெ.க.வின் ரீல்ஸ் ஆட்சியில்

# பேருந்துகள் இல்லாமல் இரவு முழுவதும் காத்திருந்த பயணிகள் போராட்டம்!

## மதுரையில் பரபரப்பு!



மதுரை, ஜுன்.1-

மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் இல்லாததால் இரவு முழுவதும் காத்திருந்த பயணிகள் அதிகாலையில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

மதுரை மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் இருந்து சென்னை, திருச்சி, தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர், ஒசூர் உள்ளிட்ட வட மாவட்டங்களுக்கும், தூத்துக்குடி, கன்னியாகுமரி, நெல்லை உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கும், பெங்களூரு, கோழிக்கோடு உள்ளிட்ட பக்கத்து மாநில நகரங்களுக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் தினமும் 2 ஆயிரம் பேருந்துகள் வரை இயக்கப்படுகின்றன.

இந்த பேருந்து நிலையத்தில் 8 நடைமேடைகள் உள்ளன. இரவு 7 மணி தொடங்கி அதிகாலை வரை சென்னை உள்ளிட்ட வெளியூர் பேருந்துகள் இயக்கும் இடங்களில் பேருந்துகள் நின்று கொண்டிருக்கும். பயணிகள் எண்ணிக்கையும் அதிகளவில் இருக்கும். பண்டிகை நாட்கள் மற்றும் சிறப்பு தினங்களின் போது சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். வெளியூர்களிலிருந்து மதுரை வழியாக இயக்கப்படும் பேருந்துகளும் மாட்டுத்தாவணி வந்து பயணிகளை ஏற்றிச் செல்வது வழக்கம்.

இந்நிலையில் நேற்று சென்னை, திருச்சி, பெரம்பலூர், தஞ்சாவூர் உள்ளிட்ட வட மாவட்டங்களுக்கு செல்வதற்காக குடும்பத்துடன் வந்தவர்கள் பேருந்துகள் இல்லாமல் காத்திருந்தனர். இரவு 9 மணியளவில் பேருந்து நிலையத்துக்கு வந்தவர்களுக்கு இன்று அதிகாலை வரை பேருந்துகள் கிடைக்கவில்லை. வெளியூர்களில் இருந்து வரும் பேருந்துகளும் வரவில்லை. வந்த ஒரு சில பேருந்துகளிலும் இருக்கைகள் காலியாக இல்லை.

பேருந்து நிலையத்தில் இரவு முழுவதும் காத்திருந்து பேருந்துகள் கிடைக்காத ஆத்திரத்தில் பயணிகள் திடீரென பேருந்து நிலையத்துக்கு வெளியே வந்து மேலூர் பிரதான சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து அங்கு வந்த போலீஸாரும், போக்குவரத்து துறை அதிகாரிகளும் பேச்சு வார்த்தை நடத்தி மாற்று பேருந்து ஏற்பாடுகள் செய்வது தருவதாக உறுதியளித்தனர். இதை யேற்று பயணிகள் சாலை மறியலை கைவிட்டனர். பின்னர் மாற்று பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டு பயணிகள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதுகுறித்து பயணிகள் கூறுகையில், மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்துக்கு எப்போது வந்தாலும் பேருந்து கிடைக்கும். பண்டிகை நாட்களில், சிறப்பு தினங்களில் பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்கும் போது சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். குறிப்பாக நகரப் பேருந்துகள் தொலைதூர பேருந்துகளாக இயக்கப்பட்டு கூட்ட நெரிசல் சமாளிக்கப்படும்.

மாட்டுத்தாவணியிலிருந்து இயக்கப்பட்ட பேருந்துகளை வைகாசி விசாகத்துக்காக திருச்செந்தூர், பழநி உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பியுள்ளனர். இதனால் ஏற்படும் பேருந்துகள் பற்றாக்குறையை சமாளிக்க கூடுதல் பேருந்துகள் இயக்க அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. முன்னேற்பாடுகள் செய்யாமல் பேருந்துகளை வைகாசி விசாகத்துக்காக அதிகாரிகள் திருப்பி விட்டதால் பயணிகள் பாதிக்கப்பட்டனர் என்றனர்.

### தலைநகர் சென்னையில் சந்தி சிரிக்கும் சட்டம் ஒழுங்கு!

# மதுபோதையில் காரை ஏற்றி இளம்பெண் படுகொலை!

## விதிகளை மீறி பார் நடத்தி சிறுவர்களுக்கும் மது விநியோகிக்க செய்யும் த.வெ.க.நிர்வாகி!

சென்னை, ஜுன் 2-

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சிக்கு வந்த பிறகு சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கும் நிலையில் உள்ளது. இதற்கு எடுத்துக் காட்டாக நேற்று முன்தினம் மதுபோதையில் காரை ஏற்றி இளம்பெண் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கூறலாம்.

சென்னை அண்ணாநகரில் விதிகளை மீறி நள்ளிரவு தாண்டி த.வெ.க. நிர்வாகி ஒருவர் தாம் நடத்தும் பாரில் மது விநியோகம் - அதுவும் சிறுவர்களுக்கு செய்வதும் அங்கு நடைபெற்ற இரவு நடனத்தில் பிரச்சினை ஏற்பட்டு படுகொலையில் முடிந்துள்ளதும் கவனிக்கத்தக்கது.

இதுபற்றிய விபரம் வருமாறு:-

சென்னை அண்ணாநகரில் த.வெ.க. நிர்வாகிக்கு சொந்தமான ஓட்டலில் உள்ள மது பாரில் இசைக்கு நடனமாடும் போது, ஏற்பட்ட தகராறில், இலங்கையைச் சேர்ந்த பெண்ணை காரை ஏற்றி கொடூரமாக கொலை செய்துள்ளனர்.

இந்த இடம், பிரபல டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வரும் த.வெ.க. நிர்வாகி ஒருவருக்கு சொந்தமானது என்று கூறப்படுகிறது. கோயம்பேட்டில் உள்ள இந்த ஓட்டலில் 'டிஜே' இசையுடன் மது பாரும் உள்ளது.

இலங்கையைச் சேர்ந்த நகுலேஸ்வரன் என்பவர் விழுப்புரம் மாவட்டம் அனிச்சாங்குப்பம் பகுதியில் உள்ள அகதிகள் முகாமில் தங்கியுள்ளார். இவருக்கு யான்சி (18) என்ற மகள் இருந்தார். கடந்த ஆண்டு கடலூரில் உள்ள பெண்கள் மேல்நிலை பள்ளியில் பிளஸ் 2 முடித்த யான்சி, சென்னையில் உள்ள கல்லூரி ஒன்றில் சேர விண்ணப்பித்திருந்தார். அதே நேரம் யான்சி பெரிய அளவில் 'இன்ஸ்டாகிராமில்' பிரபலமாக வலம் வந்தவர்.

அந்த வகையில் யான்சி கடலூரில் பள்ளியில் படித்த போது, திருவள்ளூர் மாவட்டம் கொண்டஞ்சேரி பகுதியைச் சேர்ந்த தபிதா என்பவர் அறிமுகம் கிடைத்துள்ளது. தபிதா மூலம் யான்சிக்கு, தபிதாவின் தோழிகளான பவுசியாவைப் மற்றும் தீபிகா அறிமுகம் கிடைத்துள்ளது. யான்சி தனது தோழியான பவுசியை பார்க்க கடந்த 19ம் தேதி விழுப்புரத்தில் இருந்து சென்னையில் உள்ள பவுசியா வீட்டிற்கு வந்து கடந்த 29ம் தேதி வரை தங்கியுள்ளார்.

கடந்த 28ம் தேதி யான்சியும் பவுன்சியாவும் மாலை சினிமா பார்த்துவிட்டு வருவதாக வீட்டில் சொல்லிவிட்டு ஸ்கூட்டரில் கிளம்பியுள்ளனர். மறுநாள் காலை 29ம் தேதி பவுசியா மற்றும் யான்சி ஆகியோர் போதை சரியாக தெளியாத நிலையில் பவுசியா வீட்டிற்குச் சென்றுள்ளனர். அப்போது பவுசியாவின் அம்மா இருவரையும் கடுமையாக திட்டியுள்ளார்.

இருவரும் ஸ்கூட்டரில் பவுசியாவின் அம்மாவுக்கு எந்த தகவலும் தெரிவிக்காமல் வீட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மே 29ம் தேதி இரவு தன்னுடன் பள்ளியில் படித்த தபிதா வீட்டில் இருவரும் தங்கியுள்ளனர்.

பின்னர் யான்சி, பவுசியா, தபிதா, தீபிகா உட்பட 6 இளம் பெண்களும், 3 ஸ்கூட்டரில் 30ம் தேதி இரவு கோயம்பேடு மேம்பாலம் அருகே உள்ள த.வெ.க. நிர்வாகியின் ஓட்டலான 'கேட்வே எப்எல் 3'வுக்கு வந்துள்ளனர். பிறகு இரவு 11 மணிக்கு ஓட்டலில் உள்ள மது பாரில் யான்சி உள்பட 6 இளம் பெண்களும் ஒன்றாக மது அருந்தியதாக கூறப்படுகிறது. இதே மது பாரில் அரும்பாக்கம் பகுதியைச் சேர்ந்த பாலகுரு (21), சூளைமேடு பகுதியைச் சேர்ந்த ஜோஷ்வா (19), நெற்குன்றம் பகுதியைச் சேர்ந்த கிஷோர் குமார் (19), சுமன் சக்திவேல் உள்ளிட்ட 7 பேர் ஒன்றாக மது அருந்திக் கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் பாரில் டிஜே இசையை ஒலிக்கவிட்டார். உடனே யான்சியும் அவரது தோழிகளும் நடனமாடியுள்ளனர். அப்போது சுமன் சக்திவேல், பாலகுரு குழுவினர் அவர்களுடன் சேர்ந்து நடனமாடினர்.

அப்போது அவர்கள் தகராறு செய்துள்ளனர். இதனால் யான்சியுடன் வந்த 3 பெண்கள் தங்களது வீட்டிற்குச் செல்வதாக கூறி அவசரமாக பாரில் இருந்து வெளியேறினர். இதனால் இரு தரப்புக்கும் வாக்குவாதம் முற்றியது.

ஓட்டல் முன்பு மீண்டும் இரு தரப்பினரும் தாக்கி கொண்டதால், பவுன்சர்கள் மீண்டும் இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தி அங்கிருந்து செல்லும்படி அனுப்பி வைத்தனர். ஒரு வழியாக போதையில் யான்சி தனது 17 வயது தோழியான தீபிகாவின் ஸ்கூட்டரிலும், பவுசியா, தபிதா என 4 பேர் 2 ஸ்கூட்டரிலும் புறப்பட்டு அங்கிருந்து திருவள்ளூர் மாவட்டம் கொண்டஞ்சேரி பகுதியில் உள்ள தபிதா வீட்டிற்கு புறப்பட்டுச் சென்றனர்.

அதேநேரம் பாலகுரு தரப்பினர் காரில், இவர்களின் ஸ்கூட்டர்களை பின் தொடர்ந்து விரட்டியுள்ளனர். கோயம்பேடு திருமங்கலம் சாலையில் செல்லும் போது, பின் தொடர்ந்த சுமன் சக்திவேல், பாலகுரு தரப்பு வந்த கார் மீது யாமினியும் தோழிகளும் கற்களை வீசி தாக்கியுள்ளனர். பாலகுரு தரப்பினர் யான்சி மற்றும் தீபிகா சென்ற ஸ்கூட்டரை அதிவேகமாக துரத்தி சென்று காரில் வேகமாக மோதினர். அதில் ஸ்கூட்டரை ஓட்டிய யான்சி மற்றும் தீபிகா ஆகியோர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தனர்.

அப்போதும் ஆத்திரம் தீராத பாலகுரு தரப்பினர் காயங்களுடன் கீழே விழுந்த யான்சி மீது மீண்டும் காரால் மோதிவிட்டு தப்பி ஓடிவிட்டனர். இதில் யான்சி தலையில் பலத்த காயமடைந்து ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ஸ்கூட்டரில் பின்னால் அமர்ந்து வந்த தீபிகா தலை மற்றும் உடல் பகுதியில் பலத்த காயங்களுடன் உயிருக்கு போராடி கொண்டிருந்தார். பின்னால் 2 ஸ்கூட்டரில் வந்த பவுசியா, தபிதா உள்ளிட்ட 4 இளம் பெண்கள் விபத்தை நேரில் பார்த்த அதிர்ச்சியில் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

உயிருக்கு போராடிய தீபிகாவை சாலையில் சென்றவர்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் அளித்த தகவலின் படி கோயம்பேடு போலீசார் விரைந்து வந்து 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் தீபிகாவை மீட்டு சிகிச்சைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தீபிகா அவசர மருத்துவ பிரிவில் உயிருக்கு போராடி வருகிறார்.

பின்னர் கோயம்பேடு போலீசார் விபத்து நடந்த பகுதியில் உள்ள சி.சி.டி.வி. காட்சிகளை வைத்து விசாரணை நடத்திய போது, 'கேட்வே எப்.எல்.3' ஓட்டலில் இருந்து உயிழிந்த யான்சி உட்பட 6 இளம் பெண்களை சுமன் சக்திவேல் மற்றும் பாலகுரு தரப்பினர் தங்களது காரில் பின் தொடர்ந்து திட்டமிட்டு படுகொலை செய்தது தெரியவந்தது.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் -

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பூர், ஜுன் 2 -

திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக செயற் குழுக் கூட்டம் 30.05.2026 சனிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் திருப்பூர், தாராபுரம் சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகமான “கலைஞர் அறிவாலயம்”, “தளபதி அரங்கில்” மாவட்ட கழகச் செயலாளர் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுசெயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் கலந்து கொண்டு கருத்துரையாற்றினார். இதில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன :

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க ஜீன் 3ல் நம்மில் மறைந்து மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை செம்மொழி நாளாக கொண்டாடுவதனவும், அன்றைய நாளில் பொது மக்களுக்கு உபயோகபடும் நல் காரியங்களில் ஈடுபடவும், கழக இரு வண்ண

கொடியேற்றி இனிப்பு வழங்கியும் திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு. கழகத்திற்குப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கிளை கழக நிர்வாகிகள் சிறப்பாக கொண்டாடுவதன இச்செயற்குழு கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப் படுகிறது.

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்று ஆட்சி நடத்தி வரும் அரசு சட்ட ஒழுங்கை சீர்செய்யாமல் கை கட்டி வேடிக்கை பார்த்தும், பாராமலும் இரும்பதோடு தேர்தல் பரப்புரையில் வீர வசனம் பேசியவர்கள் வாயடைத்து கொண்டும், ஆட்சியை காப்பாற்ற சில கட்சியின் சட்டமன்ற உறுப்பி னர்களை குதிரை பேரம் குதிரை வேகத்தில் ஜனநாயகத்திற்கு எதிராக குழிதோண்டி புதைக்கும் நோக்கில் இப்புதிய அரசு மேற்கொண்டு வருவதை வன்னமயா கண்டிக்கிறது, இச்செயலை தமிழகம் ஒரு போதும் ஏற்காது, மேலும் வன்மையாக கண்டிப்பதோடு சட்ட ஒழுங்கை சரி செய்ய வேண்டி இக் கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நடத்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் தாராபுரம், காங்கேயம் தொகுதிகளில் கடுமையாக பணியாற்றிய நாம் தோல்வி அடைந்து விட்டோம், மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு கழகப் பணியை தொய்வில்லாமலும், துவண்டு விடாமலும் தொடர்ந்து பணியாற்றி மீண்டும் வெல் வோம், கழகத் தலைவரின் கரங்களை வலுப்படுத்துவோம் என்றும் இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மா னிக்கப்படுகிறது”.


நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் சென்னை கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியை தழுவிய கழகத் தலைவர் தமிழகத்திற்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கியும் இந்நிகழ்வு நடந்துள்ளது மனதை வெகுவாக ஒவ்வொரு தி.மு.க. தொண்டனையும் பாதித்துள்ளது என்பதை நாம் காண்கின்றோம், இதனை திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு வருத்தத்தை பதிவு செய்வதோடு தி.மு.க. வெற்றி தோல்வியில் துவண்டு விடாமல் மீண்டும் மக்கள் பணி செய்வதெனவும், கழகத் தலைவருக்கு என்றும் உறு துணையாக செயல்படுவோம் என கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப் படுகிறது.

தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறம் பட மக்கள் நலன் காத்திட சட்டமன்றத்தின் குரலாக செயல்படுவதற்கு இக்கூட்டத்தின் வாயிலாக பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்,

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு தேர்தல் வாக்குறுதியில் இலவச மின்சாரம் 200 யூனிட் வீடுகளுக்கும் இலவசம் என்று கூறிவிட்டு பொது மக்களை ஏமாற்றி வாக்கு வாங்கிவிட்டு தற்பொழுது 500 யூனிட் மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு மட்டும் பொருந்தும் என்று கூறுகின்றனர், இதை இக்கூட்டத்தின் வாயிலாக வன்மையாக கண்டிப்பதோடு அனைத்து பொதுமக்களுக்கும் 200 யூனிட் மின்சாரம் வழங்க வேண்டும் என்று கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப் படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பரிவட்டம்



குவளையில்
பூத்த
நறுமுகை நீ

கூலிங்கிளாஸ்
அணிந்த
குறுந்தொகை நீ

கோடி ஆண்டுகள்
கடந்தாலும்

இணை சொல்லவே
முடியா
பெருந்தகை நீ

நாவிலும்
பே நாவிலும்
நர்த்தனம்
ஆடிய

நற்றமிழ்
பூகோளத்து
பொக்கிஷம்
நீ....

நித்தமும்
பிறக்கும்
சூரியனே

ஆறாம் மாதத்து
மூன்றாம்
தேதி என்பது

பாசத்தால்
பெற்ற
பிள்ளையை

அன்னைத்
தமிழுக்கு

அஞ்சுகத்தாய்
பரிவட்டம் கட்டி ஒளிவட்டம்
சூட்டிய

அது
தன்னிகரில்லா
தமிழர் திருநாளன்றோ...



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்